

# சேர்ந்தே கற்போம் படிப்படியாக செல்லும் வழி

டொரான்டோ நகரம் | இளம் குழந்தைப்பருவ சேவைக் குழு: டொரான்டோ சமூக வாழ்க்கை | சர்ரே ப்ளேஸ் மையம்

*குறிப்புப் பக்கம்*

# காட்சிகளைப் பயன்படுத்தி சுய–கவனிப்புத் திறமையக் கற்றுக் கொடுத்தல்

ஆடையுடுத்துவது போன்ற, நேரம் பிடிக்கும் மற்றும் பழக்கம் சார்ந்த புதிய சுய–கவனிப்பு பணிகளை கற்றுக்கொள்வது. காட்சித் தொடர் வரிசை என்பது, அடிப்படையில் தொடர் சித்திரங்கள் மூலமாக ஒரு பணியை முடிப்பதற்கு எடுக்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதாகும்.

இந்த சுய–கவனிப்பு பணியை பல விதத்தில் பிரித்துக்காட்டுவதனால் நீங்கள் உங்கள் குழந்தைக்குக் கற்றுக் கொடுக்கும்போதே அதை அவன் புரிந்துக் கொள்வது எளிதாக அமையும். வளர்ந்த நமக்கே, நீண்ட நாட்களாக செய்து வரும், நாம் கற்றுக்கொண்ட வழிமுறைகள் சில சமயங்களில் மறந்துவிடுவதுண்டு. "பல் துலக்குவது" என்பதை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். பல் துலக்கும் பிரஷ்ஷை எடுத்துக் கொள்வது, பற்பசையை எடுத்துக்கொள்வது, பற்பசை குழலிலிருந்து பிரஷ்ஷில் பசையை எடுத்துக்கொள்வது, வாயைத் திறந்துக் கொள்வது, பற்களை மிருதுவாக தேய்ப்பது, தண்ணீர் கொண்டு வாயைக் கொப்பளிப்பது போன்றவை யாவையும் ஒரு சில வழிமுறை பாடங்களாகும். எளிமையான பல் துலக்கும் பணி கூட சிலவேளைகளில் கடினமாக அமைவதுண்டு.

உங்கள் குழந்தைக்கு கற்றுக்கொடுக்க வேண்டிய வழிமுறைகளை பட்டியலிடுங்கள். அதன் பின்னர் அவனால் செய்யக்கூடியது மற்றும் கடினமானது எது என்பதைக் குறித்துக்கொள்ளவும். அவற்றுள் எந்த விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதை இதனால் அறிந்துக்கொள்ள முடியும்.

தொடர் சித்திரக் காட்சிகளை உறுவாக்கும் போது, ஒரே சமயத்தில் ஆறு அல்லது ஏழு வழிமுறைகளுக்கு மேல் குழந்தையினால் உள்வாங்கிக்கொள்வது கடினம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். சுய–கவனிப்பு வழிமுறைகளை முதலில் நீங்களே பட்டியலிட்டால், தொடர் காட்சிகளை உருவாக்க முடியும். இது உங்கள் குழந்தைகளுக்கு உதவியாகவும் இருக்கும்:

1. பணியை முடிக்க தேவைப்படும் பொருட்கள் எவை எவை என்று தெரிந்துக் கொள்ளவேண்டும்.
2. அவற்றை குழந்தைகள் எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதையும் அறிந்துக்கொள்ள வேண்டும்.
3. பணியை முடிக்க பின்பற்ற வேண்டிய செய்லபாட்டின் வரிசை முறையை புரிந்துக்கொள்ள வேண்டும்.

## பயன்படுத்த வேண்டிய படங்கள் அல்லது சித்திரங்கள்

பணியை குழந்தைகள் செய்து முடிப்பது போன்ற படங்களைப் பயன்படுத்தலாம். பத்திரிக்கைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட படத்தையோ அல்லது சுயமாக வரைந்த ஓவியத்தையோ பயன்படுத்தலாம். படங்கள் தெளிவாக இருக்க வேண்டும். படமோ அல்லது ஓவியமோ குழந்தைகள் எளிதாக அடையாளம் காணும்படியாக அமைய வேண்டும். உங்களது குழந்தையின் சுய–கவனிப்புப் பணியில் பங்கேற்கும் ஒவ்வொருவருக்கும் புரியும்படியாக, அதன் வழிமுறைகளை நினைவுப்படுத்தும்




வார்த்தைகளைப் பயன்படுத்திய குறிப்பு சீட்டுகளை பயன்படுத்துவது சிறந்த உத்தியாகும். உதாரணமாக "பிரஷ்ஷை எடு" என்ற வார்த்தையை அந்தப் படத்தின் மேல் பாகத்தில் அச்சிட்டு வைக்கலாம். செய்லபாட்டிலும் அதே வார்த்தையைப் பயன்படுத்தினால் குழந்தைக்கு அந்த வழிமுறைகளை புரிந்துக் கொள்வது எளிதாக இருக்கும்.

## புதியத் திறமைகளைக் கற்றுக்கொடுத்தல்

புதியவற்றை உங்களுடைய குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கும் போது, நீங்கள் பயன்படுத்தும் இடத்தை சீர் செய்து, கவனச்

சிதறல் இல்லாத வகையில் பார்த்துக்கொள்வது மிக உதவியாக இருக்கும். உதாரணமாக: குளியலறையில், அலமாரியிலோ அல்லது மேடையிலோ ஒரு சிறிய இடத்தை பல் துலக்குவதற்குத் தேவையான பொருட்களை வைப்பதற்காக ஒதுக்கலாம். வண்ணமிகு "பிர்ஷ்" மற்றும் "சிறுவர்–விரும்பும்" பற்பசை போன்றவை "பல் துலக்குவதை" சந்தோஷமான செயலாக அமைய வழி செய்யும்.

குழந்தையின் கண்ணில் படும் உயரத்தில் தொடர் சித்திரக் காட்சிகளை அமைக்கவும். ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு, அதன் குறிப்பு அட்டையைப் படித்துக் காட்டவேண்டும். இதனால் படத்துக்கும், செயலுக்கும் உள்ள தொடர்பை காற்றுக்கொள்ள முடிகிறது. வரிசை முறையை அறிந்தக்கொண்ட பிறகு உங்கள் குழந்தையை, அடுத்ததை அடையாளம் காட்டச் சொல்லலாம்.

எப்படி செய்வது என்று தெரிந்திருந்தாலும். சில விஷயங்கள் அவர்களுக்கு உடல் ரீதியாக கடினமானதாக இருக்கலாம். அதனால் அவனுக்கு கோபம் ஏற்பட்டால்: உதவி தேவைப்படுமா என்று கேட்டு, கைப்பிடித்து வழி காட்டுங்கள். பெரும்பாலன விஷயங்களுக்கு உதவ வேண்டியிருந்தாலும் அது பரவாயில்லை. அதேபோன்று குழந்தையின் முயற்சியைப் பாராட்டுவது மிகவும் அவசியமானதாகும்.

காலப்போக்கில் குழந்தை, குறைந்த மேற்பார்வையில், தானாகவே சிலவற்றை செய்வதைக் காணலாம். அப்போது படங்களின்/தொடர் காட்சிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளலாம். உதாரணமாக: "பிரஷ் மற்றும் பற்பசை எடு", "பல் துலக்கு", "வாயை நீர் கொண்டு கொப்பளி" போன்றவையாகும். குழந்தை சரியாகப் பல் துலக்குகிறான் என்று உறுதியாகத் தோன்றினால், நாள் ஒன்றுக்கு ஒருமுறை தனியாகவே செய்யவிடலாம். இருந்தாலும், "வழிமுறை வரிசையை" ஞாபகப்படுத்த மறந்து விடாதீர்கள்!

காட்சிகள் முலமாக விளக்குவதால், நன்றாகப் புரிந்துக்கொண்டு, தொடர்புகொள்வது குழந்தைக்கு மிக எளிதாக அமைகிறது.
படக் காட்சிகளைக் கொண்டு கற்றுக்கொடுப்பது
அவர்களுடைய சுதந்திரத்துக்கான முதல் படியாகும்.